பக்கங்கள்: 11

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 சித்திரை 07 ஞாயிற்றுக்கிழமை 20.04.2025 கதிர் 162

## இது ரகசியம் அல்ல!

தேசிய மக்கள் சக்தி யாழ்ப்பாணம் உட்பட வடக்கில் பல இடங்களிலும் தமது தலைவர்களை அழைத்துவந்து பெரும் பரப்புரைக் கூட்டங்களை நடத்துகின்றது. இந்தக் ☞ 2

# இந்திய ஆயுதங்களை இலங்கையில் களஞ்சியப்படுத்தி வைக்க இணக்கமா?

### உண்மை என்ன என்று கேட்கிறார் ஹிருணிகா

இந்தியாவில் போர் நிலைமை ஏற்படும் பட்சத்தில் அதற்குத் தேவையான ஆயுதங்களை இலங்கையில் களஞ்சியப்படுத்துவதற்கான இணக்கப்பாடு



எட்டப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இது நாட்டின் பாதுகாப்புக்கு பாரிய அச்சுறுத்தலாக அமையும். எனவே இதன் உண்மை தன்மை தொடர்பில் ஆளும்தரப்பு நாட்டுக்கு வெளிப்படுத்த வேண்டும் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமசந்திர தெரிவித்தார். ☞ 2

## எதிர்க் கட்சிகள் அநுரவின் கருத்தை தவறாகப் புரிந்துகொண்டனவாம்

### நேற்று அவரே விளக்கமளித்தார்

உள்ளூராட்சி மன்றங்களுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பான தனது சமீபத்திய கருத்துகள் எதிர்க்கட்சிகளால் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டுள்ளன என்று ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தெரிவித்திருக்கிறார்.

தேசிய மக்கள் சக்தி (NPP) வெற்றி பெறாத உள்ளூராட்சி மன்றங்களுக்கு நிதி ஒதுக்கப்படாது என்று அவர் தெரிவித்த கருத்துத் தொடர்பிலேயே இந்த ☞ 7

## தமிழ் காங்கிரஸைத் தவிர்த்தாலும் ஒரு தமிழ் கட்சிக்கே வாக்களிக்குக

### முன்னணி பிரமுகர் தவபாலன் தமிழ் மக்களிடம் கோரிக்கை

அகில இலங்கை தமிழ் காங்கிரஸிற்கு வாக்களிக்காது போனாலும் மற்றொரு தமிழ் கட்சிக்கே வடக்கு கிழக்கு தமிழ் மக்கள் வாக்களிக்க வேண்டும் என்று தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் வன்னி மாவட்ட முக்கியஸ்தர் தவபாலன் தெரிவித்தார். தேசிய மக்கள் சக்தி என்ற மாயையை வடகிழக்கில் இருந்து விரட்டியடிக்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

தமிழ் காங்கிரஸின் வவுனியா மாநகர சபைக்கான பரப்புரைக் கூட்டம் வவுனியா பொங்கு தமிழ் தூபியில் நேற்று ஆரம்பமாகியது. அதன் பின்னர் செய்தியாளர்களிடம் பேசியபோதே தவபாலன் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழர் தாயகம் மிகப்பெரிய நெருக்கடிக்குள் அல்லது

## உள்ளூராட்சித் தேர்தலில் மக்களின் ஆர்வம் குறைவு

உள்ளூராட்சித் தேர்தல்களில் பொதுமக்களின் ஆர்வம் மிகக் குறைவாக இருப்பதாக தேர்தல் பார்வையாளர்கள் தெரிவித்துள்ளதாக ஃபஃபரல் அமைப்பின் நிர்வாகப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

இந்த சூழ்நிலை காரணமாக வாக்களிப்பில் வீழ்ச்சி ஏற்பட அதிக வாய்ப்பு இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். மற்ற முக்கிய தேர்தல்களைப் போலல்லாமல், உள்ளூராட்சித் ☞ 2

# வேலியே பயிரை மேய்கிறது அநுர மீது சுமந்திரன் பாய்ச்சல்

### அரசமைப்பை மீறி நடக்கிறார் எனவும் குற்றச்சாட்டு

அரசலமைப்பின் 33 (இ) பிரிவு சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலை நடத்துவதற்கான சூழலை உருவாக்குவது, ஜனாதிபதியின் கடமைகளில் ஒன்று எனக் கூறும் நிலையில், வேலியே பயிரை மேயும் வகையில் தேர்தல் விதிகளை மீறி உள்ளூராட்சித் தேர்தலில் மக்களுக்கு லஞ்சம் கொடுக்க முற்படுகிறார் ஜனாதிபதி அநுரகுமார என்று கடுமையாகச் சாடியுள்ளார் தமிழ் அரசுக் கட்சியின் செயலாளர் சுமந்திரன்.

தேசிய மக்கள் சக்தி வெற்றிபெறாத உள்ளூராட்சிசபைகளின் திட்டங்களுக்கு நிதி



ஒதுக்கமாட்டோம் என்று வடக்கு கிழக்கில் ஜனாதிபதி தெரிவித்த கருத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து தனது எகஸ் தளப் பக்கம் ☞ 2

## 24 மணி நேரமும் பொய் சொல்கிறது ஆளும்தரப்பு

### சஜித் சாடல்

தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பு 24 மணி நேரமும் பொய் சொல்லிக்கொண்டிருக்கின்றது என்று எதிர்க் கட்சித் தலைவர் சஜித் ☞ 7

## பாதாளக் குழுவினர் 7 பேர் நேற்று கைது

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றத் தலைவரான கெஹெல்பத்தர பத்மேவுடன் தொடர்புடையவர்கள் என்கிற சந்தேகத்தில் ஏழு பேர் சிறப்பு அதிரடிப் படையினரால் (STF) நேற்றுக் கைது செய்யப்பட்டனர் என்று ☞ 7

## தே.ம. சக்தியின் மோசமான அரசியலால் மக்களுக்கு ஆளும்தரப்பு மீது வெறுப்பு

### எதிர்க் கட்சித் தலைவர் தெரிவிப்பு

தேசிய மக்கள் சக்தியின் மோசமான அரசியலால் பெரும்பான்மையான மக்கள் ஆளும்தரப்பு மீது வெறுப்படைந்துள்ளனர் என்று மின்னேரியாவில் நடைபெற்ற தேர்தல் கூட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

இந்த புத்தாண்டின்போது பல லட்சக்கணக்கான



மக்கள் துன்பங்கள் மற்றும் பற்றாக்குறைகளால் பாதிக்கப்பட்டிருந் ☞ 2

## அன்னை பூபதியின் நினைவேந்தல் வடக்கு கிழக்கில் உணர்வெழுச்சி

இந்தியப் படைகளின் ஆக்கிரமிப்புக்கு எதிராக 31 நாட்கள் உண்ணாநோன்பிருந்து தாயக விடுதலைக்காக உயிர் நீத்த நாட்டுப்பற்றாளர் தியாகி அன்னை பூபதியின் 37 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் வடக்கு, கிழக்கில் நேற்று உணர்வெழுச்சியுடன் நடைபெற்றன.

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்திலும் அன்னை பூபதியின் நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது. பிரதான வளாகத்தில் இந்த நிகழ்வு நடைபெற்றது. இதன்போது ☞ 2

## கதிர்காம முருகனின் உற்சவ திகதி மாற்றம் ஆடிவேல் விழாவா, ஆனி வேல் விழாவா?

### சைவ மக்கள் அதிர்ச்சி

(சகாதேவராஜா)

வரலாற்று பிரசித்தி பெற்ற கதிர்காம ஆடிவேல் விழா உற்சவ திகதியில் மாற்றமடைந்துள்ளதாக வெளியாகும் செய்தியால் அடியார்கள் மத்தியில் பெரும் குழப்பம் ஏற்பட்டுள்ளது.

முன்னர் கதிர்காமக் கந்தன் ஆலயம் வருடாந்த ஆடிவேல் விழா உற்சவம் ஜூலை 26 கொடியேற்றதுடன் தொடங்கி ஒகஸ்ட் 10 தீர்த்த உற்சவத்துடன் ☞ 2

## பெரும் அரசிற்கு எதிராக தனியாளாக மனத்துணிவை வெளிப்படுத்திய தாய்

### அன்னை பூபதிக்கு தமிழ் அரசு செயலாளர் புகழ்மாலை

ஒரு பெரும் அரச இயந்திரத்திற்கு எதிராக பெரும் படைக்கு எதிராக- துணிந்து, தன்னந்தனியாக, நிராயுதபாணியாக நின்று தனது மனவலிமையை மட்டும் வெளிப்படுத்தி மக்களிற்காக தனது உயிரையே தியாகம் செய்தவர் அன்னை -பூபதி. இப்படியான உரமேற்றுகின்ற சம்பவங்கள் கடந்து போகா. இவை எல்லாம் சிறப்பான பயனைத் தரும். அன்னைக்கு எங்களது வீர வணக்கம் என்று தெரிவித்தார் தமிழ் அரசுக் கட்சியின் செயலாளர் சுமந்திரன்.

அன்னை பூபதி அவர்களின் 37 ஆவது ஆண்டு நினைவு நாளான நேற்று அவரின் நினைவேந்தல் தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்டக் கிளையின் ஏற்பாட்டில் அக்கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான சிறிநேசனின், மட்டக்களப்பு நகரில் லயன்ஸ் ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

கூட்டங்களுக்காகப் பெருமளவில் பணம் செலவிடப்படுகின்றது. ஆனால், உள்ளூராட்சி சபைகளுக்குப்போட்டியிடும்வேட்பாளர்களின் செலவுக்காக சலிக் காசு தரமுடியாது என்று கைவிரித்து விட்டார்களாம். இதனால், மக்களிடம் சென்று பரப்புரை செய்வது எப்படி என்று தெரியாது முழி பிதுங்கி நிற்கின்றனர் அவர்களுடன் தேர்தல் கேட்கப் போனவர்கள். தவறான இடத்திற்கு வந்துவிட்டோமோ என்று வாயைப் பொத்திக்கொண்டு முணுமுணுக்கிறார்களாம்.

அண்மையில் யாழ்ப்பாணம் வந்திருந்த தேசிய மக்கள் சக்தியின் சக்தி வாய்ந்த அமைச்சரான பிமல் ரத்நாயக்க கட்சியின் உள்ளூராட்சி சபை வேட்பாளர்களைச் சந்தித்துப் பேசியிருந்தார். அப்போது தமக்குப் பரப்புரையில் ஈடுபடுவதற்குத் தேவையான நிதி வசதிகள் இல்லை என்றும் கட்சி நிதி உதவி செய்தால் மட்டுமே தம்மால் பரப்புரைகளில் ஈடுபடமுடியும் என்றும் வேட்பாளர்கள் அவரிடம் கேட்டுள்ளனர். அதற்கு கட்சியில் நிதி இல்லை, அதனால் யாருக்கும் பணம் தர முடியாது. உங்கள் செலவுகளுக்கான பணத்தை உங்கள் உறவினர்கள், நண்பர்களிடம் இருந்து பெற்று நீங்களேதான் செலவிடவேண்டும் என்று கறாராகச் செல்லிவிட்டாராம் பிமல் ரத்நாயக்க.

ஜனாதிபதியும் பிரதமரும் யாழ்ப்பாணம் வந்த கூட்டத்திற்கு மேடைபோட்ட காசைத் தந்திருந்தாலே நான்கு சபைகளில் பரப்புரை செய்திருக்கலாம் என்று புறுபுறுக்கிறார்கள் வேட்பாளர்களில் பலரும். இந்த உள்குத்து நிலைப்பாட்டால், வெளிப் பார்வைக்கு தேசிய மக்கள் சக்தி ஏதோ யாழ்ப்பாணம் உட்பட வடக்கில் தேர்தல் பரப்புரைகளில் மும்முரமாக இருப்பது போன்று தோன்றினாலும் உள்ளே எல்லாம் சோர்ந்து வடிந்து போய்க் கிடக்கிறார்கள்.

எனக்குத் தெரிந்த அச்சு முதலாளி ஒருவரும் தேசிய மக்கள் சக்தியின் சார்பில் போட்டியிடுகின்றார். உங்களிடம் இல்லாத பணமா, எடுத்துச் செலவழித்து வெல்ல வேண்டியதுதானே என்று கேட்டேன் நான். வென்றாலும்கூட ஒன்றும் தேறாது, இவர்கள் (ஜேவிபி) நாங்கள் உழைக்கப் பிழைக்கவா விடுவார்கள்? அதனால் இவர்களை நம்பி எப்படி முதலிடமுடியும். தெரியாத்தனமா வந்துவிட்டோம், ஏதோ ஒப்பேற்ற வேண்டியதுதான் என்று சலித்துக்கொண்டார். இப்படித்தான் இருக்கிறது தேசிய மக்கள் சக்தியின் உள்வீட்டு நிலமை. இத்தனைக்கும் அந்த வர்த்தகர், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியிலுள்ள ஒரு கட்சியின் நிதிச் செயலாளருக்கு நெருக்கமாக இருந்தவர் முன்னர். அவருடன் அரசியல் பணிகளில் ஈடுபட்டதுடன் தேர்தலில் போட்டியிடும் முனைப்பும் காட்டியவர். கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி பக்கம் காற்றடித்தது என்று நினைத்து அந்தப் பக்கம் தாவிவிட்டார். இவரைப் போன்றவர்களை வைத்துக்கொண்டுதான் தாங்கள் ஊழல் அற்ற ஆட்சியைத் தருவோம் என்று மார் தட்டுகிறது தேசிய மக்கள் சக்தி. விளங்கிடும் போங்கள்.

.................................................

கணக்காய்வாளர் நாயகம் பதவிக்கு பொருத்தமானவரைப் பரிந்துரைப்பதற்காக அரசமைப்பு சபை ஏப்பரல் 22 கூடவுள்ளது. அந்தப் பதவிக்கான பொருத்தமான தனது தெரிவுகளைநாளைசபாநாயகரிடம்ஜனாதிபதி சமர்ப்பிப்பார் என்று தெரிகிறது.

தலைமை கணக்காய்வாளர் நாயகமாகப் பதவி வகித்த விக்கிரமரட்ண அந்தப் பதவியிலிருந்து ஏப்ரல் 8 ஓய்வுபெற்றார். அந்த வெற்றிடத்திற்குப் புதியவரை நியமிக்கவேண்டும். தேசிய தணிக்கை அலுவலகத்தில் இரண்டு மூத்த அதிகாரிகள் உள்ளனர்,அவர்களில்ஒருவர்தணிக்கையாளர் நாயகம் பதவிக்கு நியமிக்கப்படுவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இருப்பினும் ஊழல் ஒழிப்பில் தீவிர அக்கறை கொண்டிருப்பதாக ஆளும்தரப்பு கூறிவரும் நிலையில், புதியவர்களின் பெயர்களும் பரிசீலிக்கப்படக்கூடிய வாய்ப்பு இருப்பதாகவும் கூறப்படுகின்றது.

இலங்கைப் பொதுச் சேவையில் மிக உயர்ந்த பதவிகளில் ஒன்றாகக் கணக்காய்வாளர்நாயகம்பதவிகருதப்படுகிறது.

...........................................

உள்ளூராட்சி தேர்தலில் போட்டியிடும் கட்சிகளின் பிரதிநிதிகளை நாளை சந்திப்பதற்காக அழைப்பு விடுத்துள்ளது தேர்தல் ஆணைக்குழு. மே 6 தேர்தலை நடத்தமுடியுமா அல்லது பிற்போடலாமா என்பது தொடர்பில் ஆராய்வதற்காக இந்தக் கூட்டம் கூட்டப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

தற்போதுள்ள நெருக்கடி நிலையில் தேர்தலைக் இரண்டு கட்டமாகவே நடத்த முடியும் என்ற வகையில் ஆணைக்குழு யோசனையை இந்தக் கூட்டத்தில் முன்வைக்கும்என்றுஎதிர்பார்க்கப்படுகின்றது. கொழும்பு மாநகர சபை போன்ற பல சபைகளுக்கு வாக்குச்சீட்டுக்களை மே 6க்கு முன்பாகத் தம்மால் அச்சிட்டு, விநியோகிக்க முடியாது என்பதால் ஒரே நாளில் தேர்தலை நடத்துவது சாத்தியமில்லை என்று ஆணைக்குழு கருதுகின்றது.

ஆனால், கூட்டத்தில் கலந்துகொள்ளவுள்ள கட்சிகள் தேர்தலை இரண்டு கட்டங்களாக நடத்தும் யோசனைக்கு இணங்கிவரமாட்டா, அதற்குப் பதிலாக ஒரே நாளில் தேர்தலை நடத்தக்கூடிய வகையில் அதனைப் பின்போடும்படி அவை கோரும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. இதனால், மே 6 தேர்தல் நடக்குமா இல்லையா என்பது பெரும்பாலும் நாளை தெரியவரும்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## வேலியே....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும்முகப்புத்தகம்ஆகியவற்றில்சுமந்திரன் இந்தக் கருத்தைப் பதிவு செய்துள்ளார்.

"தேசிய மக்கள் சக்தி ஆட்சி செய்யும் சபைகளுக்கு மட்டுமே நிதி வளங்கள் இலகுவாக ஒதுக்கப்படும் என்று ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்க மீண்டும் மீண்டும் கூறுவது பொய் என்பதற்கு அப்பால் தேர்தல் இலஞ்சம் ஆகும். அரசமைப்பின் 33 (இ), சுதந்திரமானதும் நீதியுமான தேர்தலை நடத்துவதற்கான சூழலை உருவாக்குவது, ஜனாதிபதியின் கடமைகளில் ஒன்று எனக் கூறுகிறது. வேலியே பயிரை மேயும் இவ் விதி மீறலுக்கு எதிராக தேர்தல் ஆணைக்குழு நடவடிக்கை எடுக்குமா?" என்று சுமந்திரன் பதிவிட்டுள்ளார்.

வடக்கு கிழக்கில் தேர்தல் பரப்புரைகளில் ஈடுபட்ட ஜனாதிபதி, உள்ளூராட்சி சபைகளை தேசிய மக்கள் சக்திக்கு வழங்காமல் மக்கள் வேறு கட்சிகளுக்கு வழங்கினால் அவற்றின் முன்மொழிவுகளுக்கு நிதி ஒதுக்க ஒன்றுக்குப் 10 தடவைகள் யோசிப்போம் என்று மிரட்டல் விடுத்திருந்தார். கிண்ணியா, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் அவர் மீண்டும் மீண்டும் இந்த விடயத்தைக் கூறி இருந்தார்.

"பிரதேச சபைகளில் இருந்து வரும் முன் மொழிவுகளில் இருந்தே கிராமத்தை கட்டி எழுப்ப முடியும். பிரதேச சபைகள் நகர சபைகள் மாநகர சபைகளில் தேசிய மக்கள் சக்தி ஆட்சி நடந்தால் அவர்களின் முன் மொழிவுகளை கண்களை மூடிக்கொண்டு ஏற்று அதற்கு நிதிகளை ஒதுக்குவோம். வேறு யாருடைய கைகளில் சபைகள் சென்றாலும் அவர்களின் முன் மொழிவுகளுக்குப் பத்து தடவைகளுக்கு மேல் யோசனை செய்தே நிதி ஒதுக்குவோம். கடந்த காலங்களில் பல ஊழல்கள் இடம்பெறன என்பதே அதற்கான காரணம். ஆனால் தேசிய மக்கள் சக்தி ஊழலற்ற ஆட்சி. மத்தியில் ஊழலற்ற ஆட்சி காணப்படும்போது, கிராம அபிவிருத்திகளில் ஊழல்செய்ய முடியாது. எனவே தேசிய மக்கள் சக்திக்கு வாக்களியுங்கள். யாழ்ப்பாணத்தில் உள்ள 17 சபைகளையும் எமக்கு தாருங்கள்" என்று யாழ்ப்பாணத்தில் உரையாற்றும்போது தெரிவித்திருந்தார்.

அவரதுஇந்தக்கருத்துஇலங்கைமுழுவதும் எதிர்க் கட்சிகளிடம் இருந்து கடுமையான கண்டனங்களைப் பெற்றிருக்கிறது.

## உள்ளூராட்சித்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தல்களில் வாக்களிப்பு விகிதம் பொதுவாக 50முதல்60சதவீதம்வரையேஇருக்கும்என்று கூறிய ஹெட்டியாராச்சி, விரிவான தேர்தல் பரப்புரை இல்லாதது, தேர்தல் பரப்புரைப் பொருட்களை காட்சிப்படுத்தாதது மற்றும் வேட்பாளர்கள் மற்றும் ஆதரவாளர்கள் அதிக அளவில் கூடாதது ஆகியவை தேர்தலுக்கான உற்சாகமின்மைக்குமுக்கியகாரணங்களாகும் என்றும் தெரிவித்தார்.

இருப்பினும், தேர்தல் மிக நெருங்கி வரும்போதுஉற்சாகம்ஓரளவுஅதிகரிக்கக்கூடும் என்று அவர் சுட்டிக்காட்டுகிறார்.

இதற்கிடையில், உள்ளாட்சித் தேர்தல் பிரச்சாரம் தொடங்கியதிலிருந்து எந்தவொரு கடுமையானசம்பவங்களும்பதிவாகவில்லை என்று ஃபஃபரல் அமைப்பு கூறுகிறது.

உள்ளாட்சித் தேர்தலுக்கான வாக்குப்பதிவு நாளில் நாடு முழுவதும் சுமார் 4,000 தேர்தல் கண்காணிப்பாளர்களை ஈடுபடுத்தவும் அது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## அன்னை....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அகவணக்கம் செலுத்தப்பட்டு, அன்னை பூபதியின் திருவுருப்படத்துக்குச் சுடரேற்றி மலர்தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதில் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் கலந்துகொண்டு அஞ்சலிகளைச் செலுத்தினர். 1988ஆம் ஆண்டு இந்தியப் படையினருக்கு எதிராகக்குரல்கொடுக்க, அறப்போராட்டங்களை நடத்த மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அன்னையர் முன்னணி முடிவு செய்தது.

'உடனடியாகப் போர் நிறுத்தத்தை நடைமுறைப்படுத்தவேண்டும்', 'தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தித் தீர்வு காணவேண்டும்' ஆகிய இரண்டு கோரிக்கைகளை முன்வைத்து மட்டக்களப்பு மாமாங்கப்பிள்ளையார் ஆலயத்தில் குருந்தை மரநிழலில் 1988 மார்ச் 19 அன்னை பூபதி சாகும் வரையிலான பட்டினிப் போராட்டத்தை ஆரம்பித்தார்.

அன்னை பூபதி நீர் மட்டும் அருந்தி சாகும் வரை உண்ணா நோன்பு இருந்தார். இடையில் பல தடங்கல்கள் வந்தன. பட்டினிப் போராட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்கியவர்களையும், அன்னை பூபதியின் பிள்ளைகள் சிலரையும், இந்திய இராணுவம் கைது செய்தது. ஆயினும், போராட்டம் நிறுத்தப்படவில்லை. அவர் உறுதியாகப் போராட்டத்தைத் தொடர்ந்தார்.

கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்படாத நிலையில் சரியாக ஒரு மாதத்தின் பின் 19.04.1988 அன்று காலை 8.45 மணிக்கு அன்னை பூபதி உயிர் நீத்தார்.

## இந்திய....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடுவலையில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜெனீவாவுக்கான இலங்கையின் முன்னாள் வதிவிடப்பிரதிநிதியான தயான் ஜயதிலக இந்தியாவுடன் செய்து கொண்டுள்ள ஒப்பந்தங்கள் தொடர்பில் தெரிவித்திருக்கின்றார்.

அதற்கமைய குறித்த 7 ஒப்பந்தங்களில் ஒன்று இந்தியாவில் ஏதேனும் அவசர போர் நிலைமை ஏற்படும் பட்சத்தில் இலங்கையில் ஆயுதங்களை களஞ்சியப் படுத்துவதற்கான இணக்கப் பாடாகும்.

இதில் உள்ள அபாய நிலைமையை புரிந்துகொள்ள வேண்டும். இந்தியாவுக்கும் பாக்கிஸ்தானுக்குமிடையில் மோதல்கள் காணப்படுகின்றன. அவை தீவிரமடைந்து போர் ஏற்பட்டால் இலங்கைக்கு எத்தகைய பாதிப்புக்கள்ஏற்படும்என்றுசிந்திக்கவேண்டும். தேவையற்ற பிரச்சினைகளில் நாமே போய் சிக்கிக் கொள்கின்றோம்.

முந்தைய ஆளும்தரப்புக்கள் மிகத் தெளிவாக அணிசேரா வெளிநாட்டுக் கொள்கையைப் பின்பற்றின. ஆனால் தற்போதைய ஆளும்தரப்பு அவ்வாறு அல்ல. நாம் இந்தியாவுடன் சிறந்த உறவைப் பேண வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை. ஆனால் தேவைக்கு அதிகமாக இடத்தை வழங்கும்போது பிரச்சினைகள் தோற்றம் பெறும்.

ஜே.வி.பி.யினர் எதிர்க்கட்சியாக இருந்தபோது இந்தியாவை கடுமையாக எதிர்த்து விமர்சித்ததால் தற்போது அதனை சரி செய்வதற்காக இவ்வாறான ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளனர்.

இந்தியாவுடன் செய்து கொள்ளப்பட்டுள்ள 7 ஒப்பந்தங்களின் உள்ளடக்கங்கள் என்ன என்பதை அமைச்சரவையோ, நாடாளுமன்றமோ அறிந்திருக்கவில்லை.

இது குறித்து ஆளும்தரப்பிடம் கேள்வியெழுப்பிய போது தகவல் அறியும் உரிமை சட்டத்தின் ஊடாக அறிந்து கொள்ளுமாறு கூறுகின்றனர். பாதுகாப்புடன் தொடர்புடைய விடயங்கள் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் மூலம் வழங்கப்படாது என்பது தெரியாதா? இவை தொடர்பில் நாட்டுக்கு தெளிவுபடுத்த வேண்டியது ஆளும்தரப்பின் பொறுப்பாகும் என்றார்.

## தே.ம. சக்தியின் ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தனர். பெரும் எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் அமைக்கப்பட்ட இந்த ஆளும்தரப்பு மக்களை ஏமாற்றி, தனது வாக்குறுதிகளை நிறைவேற்றாத, பொய், வஞ்சக மற்றும் ஊழல் நிறைந்த ஆளும்தரப்பாகச் சாதனை படைத்துள்ளது.

பொருட்களின்விலைகளைக்குறைப்பதாக அளித்த வாக்குறுதி மீறப்பட்டதால், அரிசி, பால் மா, பானங்கள் போன்ற அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளன. எரிபொருளின் விலை குறையவில்லை. மின்சாரத்தின் விலையை 33 வீதம் குறைப்போம் என்றனர். ஆனால் 20 வீதம் அதுவும் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் நிர்ப்பந்தத்தாலேயே குறைத்தனர்.

ஜனாதிபதிமற்றும்நாடாளுமன்றத்தேர்தல் மேடைகளில் பொய்கள் மந்திரம் போல உச்சரிக்கப்பட்டன. இன்று பொய்களைச் சொல்லி மக்களை மீண்டும் ஏமாற்றத் தயாராக வருகின்றனர் - என்று மேலும் தெரிவித்தார்.

## கதிர்காம....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிறைவு பெற இருந்தது.

தற்போது திகதி மாற்றத்தையடுத்து 2025 கதிர்காம ஆடிவேல் விழா உற்சவம் ஜீன் 26 கொடியேற்றத்துடன் ஆரம்பிக்கப்பட்டு ஜூலை 10 தீர்த்த உற்சவத்துடன் நிறைவு பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனால்இதுவரைகதிர்காமம்உற்சவத்தை ஆடிவேல் விழா என அழைத்து வந்த சைவ பக்தர்கள் இனி இது ஆனிவேல் விழாவா என்கிற குழப்பத்திற்கு ஆளாகியுள்ளனர். அதிர்ச்சியடைந்துள்ளனர்.

கதிர்காமக்கந்தனின்திருவிழாஇடம்பெறும் திகதிகளில் திடீர் மாற்றம் இடம் பெற்றுள்ளதாக சேவற்கோடியோன் அமைப்பு தனது உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் செய்தி வெளியிட்டுள்ளது.

முன்பதாக ஜீலை 26 இடம்பெறவிருந்த கொடியேற்றம் தற்போது ஜீன் மாதம் 26 இடம்பெறுவதாக அறிவிக்கப்பட்டுள்ளதாக அச் செய்தி கூறுகிறது.

இலங்கையில்வெளியாகியபெரும்பாலான கலண்டர்களில் ஜுலை 26 கதிர்காமக் கந்தன் கொடியேற்ற என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் இவ் வருட நாட்குறிப்பில் மற்றைய ஆலய உற்சவ திகதிகள் குறிப்பிடப்பட்டுள்ளபோதும் பிரபல கதிர்காம ஆடிவேல் உற்சவ திகதி தொடர்பில் எதுவும் இல்லை.

கதிர்காம உற்சவ திகதி மாற்றத்தையடுத்து இலங்கையின் மிக நீண்ட யாழ்ப்பாணம் கதிர்காமம் பாதயாத்திரை மே 1 ஆரம்பமாகிறது என் பாதயாத்திரை குழுத் தலைவர் ஜெயா வேல்சாமி தெரிவித்தார்.

இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் கதிர்காமம் ஆலய நிர்வாகம் இக் குழப்பத்தை தீர்த்து வைக்க வேண்டும் என்று இந்துமக்கள் கோருகின்றனர்.

## பெரும் அரசிற்கு ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிளப் வீதியில் உள்ள அலுவலகத்தில் இடம்பெற்றது.

அங்கு உரையாற்றிய சுமந்திரன் தெரிவித்ததாவது:

37 ஆண்டுகளிற்கு முன்னர் பலவிதமான கோரிக்கைகளை முன் வைத்து- அந்த நாள்களிலே தமிழ் மக்களிற்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்ட அட்டூழியங்களிற்கு எதிராகவும், தமிழ் மக்களிற்கான நிரந்தர ஓர் அரசியல் தீர்வைப் பெறவேண்டும் என்பதற்காகவும் உண்ணா நோன்பிருந்து மாய்ந்த அன்னை பூபதியின் நினைவுநாள் இன்றாகும்.

எத்தனை ஆண்டுகளானாலும் மக்கள் சார்பிலே இவ்வாறு செய்த இந்த அம்மாவின் தியாகத்தை நினைவுகூருவோம். இது எமது மனங்களில் அழியாத நினைவாக என்றும் இருக்கும். தமிழ் மக்களின் சரித்திரங்கள் எழுதும்போதும் இப்படியான உயிர்த் தியாகங்கள் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படும்.

ஒரு தாய், பெரிய அரச இயந்திரத்திற்கு எதிராக - பெரும் படைத் தளத்திற்கு எதிராக - துணிந்துதன்னந்தனியாகநிராயுதபாணியாக

தொடர்ச்சி 7 ம் பக்கம்.....

காலைக்கதிர் Kalaikkathir

# நிதி ஒதுக்கீடு தொடர்பான ஜனாதிபதியின் கருத்து; மக்களை அச்சுறுத்தும் தேர்தல் விதிமுறை மீறல்

## தர்மலிங்கம் சித்தார்த்தன் காட்டம்

ஏனைய கட்சிகள் ஆட்சியமைக்கும் உள்ளூராட்சிமன்றங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்வதற்கு பலமுறை சிந்திப்போம் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க கூறுகின்றமை மக்களை அச்சுறுத்துகின்ற நடவடிக்கையாகும் எனச் சுட்டிக்காட்டியுள்ள ஜனநாயக தமிழ்த்தேசியக் கூட்டணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன், இத்தேர்தல் விதிமீறல் தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

மன்னாரில் வியாழக்கிழமை நடைபெற்ற தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் உரையாற்றிய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, தேசிய மக்கள் சக்தி ஆட்சியமைத்திருக்கும் உள்ளூராட்சிமன்றங்களால் முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்படும்போது அவற்றுக்குக் கண்ணை மூடியவாறு நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்படும் எனவும், வேறு கட்சிகள் ஆட்சியமைத்திருக்கும் உள்ளூராட்சிமன்றங்களால் சமர்ப்பிக்கப்படும் நிதி ஒதுக்கீட்டு முன்மொழிவுகள் குறைந்தபட்சம் 10 தடவைகளேனும் ஆராயப் படும் எனவும் தெரிவித்திருந்தார்.



இதனைக் கடுமையாகக் கண்டித்துக் கருத்து வெளியிட்ட தர்மலிங்கம் சித்தார்த்தன், இதுவரை காலமும் எந்தவொரு ஜனாதிபதியும் வெளியிடாத கருத்தை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க வெளியிட்டிருப்பதாகச் சாடினார்.

ஜனாதிபதி என்பவர் இந்நாட்டின் சகல பிரஜைகளுக்கும்பொதுவானவர்எனச்சுட்டிக்காட்டிய அவர், அத்தகைய முக்கிய பொறுப்பில் இருக்கும் நபர் இவ்வாறு கூறுகின்றமை கடும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருப்பதாகக் குறிப்பிட்டார்.

அதேபோன்று உள்ளூராட்சிமன்றத்தேர்தல்கள் நடைபெறவிருக்கும் நிலையில், ஏனைய கட்சிகள் ஆட்சியமைக்கும் உள்ளூராட்சிமன்றங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்ய பலமுறை சிந்திப்போம் எனக் கூறுகின்றமை மக்களை அச்சுறுத்துகின்ற நடவடிக்கையாகும் எனச் சுட்டிக்காட்டிய சித்தார்த்தன், ஜனாதிபதியின் இத்தகைய தேர்தல் விதிமீறல் குறித்து தேர்தல்கள் ஆணைக்குழு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என வலியுறுத்தினார்.

அதுமாத்திரமன்றி ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் இந்த உரை மூலம் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் எவ்வாறு செயற்படும் என்பதை தமிழ் மக்கள் புரிந்துகொள்ளவேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

# வகுப்பறை நிர்மான பணிகளை பார்வையிட்ட முன்னாள் எம்.பி.

(நூருல் ஹுதா உமர்)

பிரதேச மாணவர்களின் கல்வியில் முன்னணி பாடசாலைகளில் ஒன்றாக திகழும் சாய்ந்தமருது கல்முனை அல்-ஹிலால் வித்தியாலய மாணவர்களின் நலன்கருதி முன்னாள் இராஜாங்க அமைச்சர் சட்டத்தரணி எச்.எம்.எம் ஹரீஸின் ரி- 100 திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட சுமார் 05 மில்லியன் ரூபாய் விசேட நிதி ஒதுக்கீட்டின் மூலம் நிர்மாணிக்கப்பட்டு வரும் வகுப்பறை கட்டட அபிவிருத்தி பணிகளை கள விஜயம் செய்து முன்னாள் இராஜாங்க அமைச்சர் சட்டத்தரணி எச்.எம்.எம் ஹரீஸ் ஆராய்ந்தார்.

சாய்ந்தமருது கல்முனை அல்- ஹிலால் வித்தியாலய அதிபர் யூ.எல். நஸார் தலைமையிலான பாடசாலை சமூகத்தை சந்தித்து பாடசாலை அபிவிருத்தி பணிகள், கல்வி மேம்பாட்டு விடயங்களை பற்றி கலந்துரையாடிய முன்னாள் இராஜாங்க அமைச்சர் சட்டத்தரணி எச்.எம்.எம் ஹரீஸ் அவர்கள் தனது நிதியொதுக்கீட்டில் நடைபெறும் வேலைத்திட்டங்களை பார்வையிட்டதுடன் அடுத்தகட்ட பணிகளுக்கு தேவையான ஒழுங்குகள் தொடர்பிலும் கலந்துரையாடினார்.

இதன்போது தனது 01 மில்லியன் ரூபா விசேட ஒதுக்கீட்டில் நிர்மாணிக்கப்பட்டுள்ள பட்மின்டன் அரங்கையும் பார்வையிட்ட அவர் மாணவர்களின் விளையாட்டுத் துறை, கல்விசாரா விடயங்களின் அடைவுகள் மேம்பாட்டு விடயங்கள் பற்றியும் ஆராய்ந்தார்.

உதவி அதிபர் எம். உவைஸ், முன்னாள் இராஜாங்க அமைச்சர் சட்டத்தரணி எச்.எம்.எம் ஹரீஸ் அவர்களின் வெகுஜன மக்கள் தொடர்பாடல் செயலாளர் யூ.எல். நூருல் ஹுதா உட்பட முன்னாள் எம்.பி ஹரீஸின் இணைப்பாளர்கள், பாடசாலை உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்ட இந்த விஜயத்தின் போது தொடர்ச்சியாக இப்பாடசாலையின் வளர்ச்சியில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் சட்டத்தரணி எச்.எம்.எம் ஹரீஸின் பங்களிப்பு தொடர்பில் சிலாகித்த சாய்ந்தமருது அல்-ஹிலால் வித்தியாலய அதிபர் யூ.எல். நஸார் அவர்கள் இப்பாடசாலையை தரம் 11 வரை தரமுயர்த்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வழங்கிய ஒத்துழைப்புக்கும், தொடர்ச்சியான சேவைகளுக்கும் நன்றிகளையும், பாராட்டுக்களையும் தெரிவித்தார்.





# வவுனியா தமிழ் மத்திய மகா வித்தி கால்பந்தாட்ட போட்டியில் வெற்றி

## பெண்கள் பிரிவில் நெளுக்குளம் வெற்றிவாகை சூடியது

வவுனியாமாவட்ட பாடசாலைகள் உதைபந்தாட்ட சங்கம் நடத்திய அமரர் சௌந்தநாயகம் ஞாபகார்த்த உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் ஆண்கள் பிரிவில் வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயமும் பெண்கள் பிரிவில் நெளுக்குளம் மகாவித்தியாலமும் வெற்றி வாகை சூடின.



கடந்த இரு தினங்களாக இடம்பெற்றுவந்த சுற்றுப் போட்டி இறுதிநாள் நிகழ்வு வவுனியா ஜங்ஸ்ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில் வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்றிருந்தது.

பரபரப்பான இறுதிப் போட்டியில் ஆண்கள் பிரிவில் வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயமும், பெண்கள் பிரிவில் நெளுக்குளம் மகாவித்தியாலயமும் வெற்றிக்கிண்ணத்தை கைப்பற்றியது.

வெற்றிபெற்ற அணிகளுக்கான வெற்றிக்கேடயங்கள விருந்தினர்களால் வழங்கிவைக்கப்பட்டன.

சங்கத்தின் இணைப்பாளர் இ.சற்சொரூபன் தலைமையில் இடம்பெற்ற இப்போட்டியில் வவுனியா தெற்கு வலய ஆசிரிய ஆலோசகர் விஸ்னு, ஜங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தலைவர் பாபு, அனுசரணையாளர் சார்பில் சௌந்தரநாயகம் பிரதாபன் மற்றும் ரவீந்திரன், மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் அமலன், சங்கத்தின் முக்கிய உறுப்பினர்களான ஜனகரன், ரெஜினோல்ட் உட்பட பலர்கலந்து கொண்டிருந்தனர்.

100

# வாகரையில் விபத்து ; குடும்பஸ்தர் இறப்பு

மட்டக்களப்பு-வாகரைபொலிஸ்பிரிவுக்கு உட்பட்ட மாங்கேணி புல்லாவி சந்தியில் நேற்று (சனிக்கிழமை) இடம்பெற்ற விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

பஸ் மற்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றுடன் ஒன்று மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. விபத்தின் போது மோட்டார் சைக்கிளின் செலுத்துனர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனையைச் சேர்ந்த 40 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்துள்ளார்.

இவர் மீன் வியாபாரத்துக்காக வாழைச்சேனை பகுதியிலிருந்து மாங்கேணி பகுதிக்கு மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்தபோதுஇந்தவிபத்துஇடம்பெற்றுள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

உயிரிழந்தவரின் சடலம் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## சிலுவை சுமக்கும் மக்களுக்கு நீதி எங்கே?

2025 ஏப்ரல் 21 — உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் ஆறாம் ஆண்டு நினைவு நாள். யேசு நாளை உயிர்ந்தெழுந்துவிடுவார். ஆனால் இலங்கையில் நீதி மீண்டும் உயிர்த்தெழுமா? இந்நாளில், நாம் மீண்டும் ஒரே கேள்வியை முன்வைக்க வேண்டிய சூழ்நிலை உருவாகியுள்ளது. இன்னும் எத்தனை ஆண்டுகள் கடக்கவேண்டும், குற்றவாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவதற்காக?

2019 ஏப்ரல் 21 இலங்கையை உலுக்கிய, நூற்றுக்கும் மேற்பட்ட உயிர்களை காவு கொண்ட பயங்கரத் தாக்குதல் நடந்த நாள். கலங்கிய உலகம், உருகிய மக்கள், உடைந்த குடும்பங்கள் — ஆனால் இது மட்டுமல்ல, உடைந்தது நாட்டின் நியாயம் மீதான நம்பிக்கையும்.

ஆறாண்டுகள் கடந்தும், முக்கிய சூத்திரதாரிகள் யாரென்பது முழுமையாக வெளிச்சமிடப்படவில்லை. ஆயிரக்கணக்கான பக்கங்களை கொண்ட விசாரணை அறிக்கைகள், பல ஆட்சி மாறல்கள், விசாரணைப் பொறுப்பாளிகளின் இடமாற்றங்கள் — ஆனால் தீர்க்கமான நடவடிக்கையொன்றும் இல்லை.

அரசுத் தலைவர் அநுரகுமார திசநாயக்க, ‘இந்த ஆண்டிற்குள் முக்கிய சூத்திரதாரிகள் கண்டறியப்படுவர்’ என வாக்குறுதி அளித்திருக்கிறார். இவ்வாறு, ஒவ்வொரு ஆண்டும் வரும் நினைவு நாளில் வழங்கப்படும் வாக்குறுதிகளின் தொடராக இது மாறக்கூடாது என்பது அனைவரதும் விருப்பம். ஆனால் இலங்கையின் விதி மாறாது என்பதுதான் யதார்த்தமாக இருக்கின்றது. மக்கள் கேட்கிறார்கள் — நீதி ஒரு அரசியல் வாக்குறுதியா, அல்லது ஒரு அடிப்படை மனித உரிமையா?

இது ஒரு தனிப்பட்ட நிகழ்வின் நீதி பற்றியதல்ல. இலங்கையின் நீண்ட கால அரசியல் வரலாற்றில், பல்வேறு தாக்குதல்களின், போரின்போது காணாமல் போனவர்களின், மனித உரிமை மீறல்களின் வழக்குகளில், குற்றவாளிகள் தண்டிக்கப்படாமல் விடப்பட்டுள்ளனர். இந்த உள்நோக்கு மாறாதவரை, உயிர்த்த ஞாயிறு தாக்குதல் போன்று நிகழ்வுகள் மீண்டும் மீண்டும் முந்தைய பிழைகளைப் போலவே மறக்கப்படும்.

நாட்டின் நீதித்துறை, பாதுகாப்பு அமைப்புகள், அரசியல் தலைவர்கள் — இவர்கள் ஒவ்வொருவரும் இந்த வெறுமையற்குப் பங்குபற்றியுள்ளார்கள். விசாரணைகள் தொடராது, புகார்களுக்குச் செவிசாய்க்கப்படாது, விசாரணை அறிக்கைகள் பொதுமக்களிடம் பகிரப்படாது — இவை அனைத்தும் நியாயத்தை விலக்கும் அமைப்பு முறையின் பிரதிபலிப்பே.

உயிர்த்த ஞாயிறு நினைவுநாளில் நாம் செய்யவேண்டியது மாலையணிவதோ, உரையாற்றுவதோ அல்ல. நியாயத்தை நிலைநாட்டுவதே உண்மையான அஞ்சலி. அதற்கு இப்போது கடைசி வாய்ப்பு.

மாற்றம் மாற்றம் என்றவர்களிடமிருந்து இன்னும் மாற்றத்தைக் காணவில்லை. மாற்றம் எப்போது?

## ஐயூப் அஸ்மினை நாட்டுக்கு அழைத்து ஈஸ்டர் தாக்குதல் குறித்து விசாரிக்குக

### முபாறக் அப்துல் மஜீத் கோரிக்கை

(பாறுக் ஷிஹான்)

ஈஸ்டர் தாக்குதலில் ஜம்மியதுல் உலமாவை சம்பந்தப்படுத்தும் ஐயூப் அஸ்மினை இலங்கை அரசு நாட்டுக்கு வரவழைத்து விசாரணை செய்ய வேண்டும். ஈஸ்டர் தாக்குதலில் அகில இலங்கை ஜம்மியதுல் உலமாவை சம்பந்தப்படுத்துவதை உலமா கட்சி வன்மையாக கண்டித்துள்ளது என உலமா கட்சித்தலைவரும் ஸ்ரீலங்கா ஐக்கிய காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவருமான முபாறக் அப்துல் மஜீத் முப்தி தெரிவித்துள்ளார்.

இது பற்றி ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள செய்தியில் தெரிவித்துள்ளதாவது-

அகில இலங்கை ஜம்மியதுல் உலமாவின் தலைமை என்பது 2006 ஆம் ஆண்டு முதல் ஆயுட்கால தலைமையாக இருக்கும் விடயத்தில் உலமா கட்சி எப்போதும் எதிர்த்தே வருகிறது. ஜம்மிய்யாவின் தலைமை என்பது இரண்டு தடவைக்கு மேல் ஒருவரே இருக்க கூடாது என உலமா கட்சி தொடர்ந்து கூறி வருகிறது.



ஆனால் அதற்காக ஈஸ்டர் தாக்குதல் விடயத்தில் அ.இ. ஜம்மியதுல் உலமாவுக்கு சம்பந்தம் இருப்பதாக வட மாகாணசபையில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் உறுப்பினராக செயற்பட்ட அஸ்மின் என்பவர் கூறியிருப்பது முட்டாள்தனமான கருத்தாகும். இதை உலமா கட்சி வன்மையாக கண்டிப்பதுடன் இதற்கான சரியான ஆதாரங்களை அவர் முன் வைக்க வேண்டும்.

முடியாத போது வெளிநாட்டில் இருக்கும் அவரை இலங்கை அரசு நாட்டுக்கு வரவழைத்து விசாரணை செய்து அவர் அபாண்டம் சொன்னவராயின் தண்டனை வழங்கப்பட வேண்டும். மேற்படி அஸ்மின் என்பவர் தமிழ் கூட்டமைப்பின் ஆதரவாளர் என்பதால் புலம் பெயர் நாட்டில் நல்ல பெயர் எடுக்க இவ்வாறான கதைகளை சொல்கிறாரா என்பதும் விசாரிக்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

## காரைதீவு பகுதியில் திடீர் சோதனையில் சிக்கிய நுகர்வுக்குப் பொருத்தமற்ற உணவுகள் அழிப்பு

(பாறுக் ஷிஹான்)

பொது மக்களுக்கு சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு மிக்க உணவுகளைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் கல்முனை பிராந்தியத்தில் உள்ள உணவகங்கள், உணவு கையாளும் நிறுனங்களை சோதனைக்குட்படுத்தும் விசேட வேலைத்திட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைவாக, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸதீனின் வழிகாட்டலுக்கு அமைய காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் தஸ்லிமா வசீர் தலைமையில் காரைதீவு பிரதேசங்களில் உள்ள பழக்கடைகள், ஹோட்டல்கள், வெதுப்பகங்கள் உள்ளிட்ட உணவு கையாளும் நிறுவனங்கள் என்பன திடீர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இதன் போது இம்மாதம் பல்வேறு உணவு பாதுகாப்பு செயற்பாடுகள் மேற்கொள்ளபட்டதுடன் உணவகங்கள், பல்பொருள் அங்காடிகள், மீன்வாடிகள், பழ விற்பனை நிலையங்கள், இறைச்சி விற்பனை நிலையங்கள், உணவு கண் காட்சிகள் மற்றும் நடமாடும் உணவு விற்பனை நிலையங்கள் போன்றன பரிசோதனை மேற்கொள்ளபட்டு சுகாதார ஆலோசனை வழங்கபட்டத்துடன் உணவு சுகாதாரத்தை மீறிய நபர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கையும் மேற்கொள்ளபட்டுள்ளது.

இதன்போது சுகாதார விதிமுறைகளை மீறிய உணவக உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன் மனித நுகர்வுக்கு பொருத்தமற்ற, பழுதடைந்த உணவுப் பொருள்களும் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டன. அத்துடன் பாவிக்க முடியாத, சேதமடைந்த உணவு தாயாரிக்கும் பாத்திரங்களும் கைப்பற்றப்பட்டன. பிராந்தியத்தில் உள்ள உணவகங்கள், உணவு கையாளும் நிறுவனங்கள் சோதனைக்குட்படுத்தும் வேலைத்திட்டம் பிராந்திய பணிப்பாளர் உத்தரவிற்கமைவாக தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் இத்திடீர் சோதனை நடவடிக்கையில் பிராந்திய மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர் , உணவு மருந்துகள் பரிசோதகர் உள்ளிட்ட பொதுச் சுகாதார பரிசோதகர்கள் இணைந்து சோதனை நடவடிக்கையினை முன்னெடுத்திருந்தனர்.







காலைக்கதிர் Kalaikkathir

# வவுனியா வேலங்குளத்தில் காட்டு யானைகள் அட்டகாசத்தால் தென்னைப் பயிர்கள் சேதம்

## அல்லல்படும் மக்கள்

வவுனியா வேலங்குளம், கோவில் புளியங்குளம் கிராமத்தில் வியாழக்கிழமை இரவு உட்புகுந்த காட்டு யானைகள் காய்க்கும் நிலையில் இருந்த பெருமளவு தென்னை பயிர்களை சேதமாக்கிச் சென்றுள்ளது.

குறிப்பாக வேலங்குளம் கிராம சேவையாளர் பிரிவிற்குட்பட்ட மடுக்குளம், கோவில்மோட்டை, செங்கற்படை, சின்னத்தம்பனை, சிவநகர், குஞ்சுக்குளம், கோவில் புளியங்குளம் போன்ற கிராமங்களுக்குள் அண்மையநாள்களில் தொடர்ச்சியாக செல்கின்ற காட்டு யானைகள் விவசாய நிலங்கள் மற்றும் தோட்டப் பயிர்களை சேதமாக்கிச் செல்கின்றது.



வியாழக்கிழமை இரவும் குறித்த கிராமங்களுக்குள் உட்புகுந்த யானைகள் காய்க்கும் நிலையில் இருந்து தென்னைபயிர்களை நாசமாக்கிச்சென்றுள்ளது.

இவ்வாறான சம்பவங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் நிலையில் எமக்கான தீர்வை எந்த ஓர் அதிகாரிகளும் இதுவரை முன்வைக்கவில்லை என பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவிப்பதுடன்

எமது கிராமத்தை சுற்றிச் யானை வேலியை அமைத்து தருமாறு பல்வேறு தரப்பிடமும் கோரிக்கை விடுத்துள்ளோம். ஆனால் இதுவரை கிடைக்கவில்லை என கிராம மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

100



# மின்னல் தாக்கியதில் உயிரிழந்தவரின் சடலம் உறவினர்களிடம் கையளிப்பு

(பாறுக் ஷிஹான்)

வயலில் வேலையில் ஈடுபட்ட வேளை மின்னல் தாக்குதலில் உயிரிழந்தவரின் சடலம்பிரேதபரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறைபொலிஸ்பிரிவிற்குட்பட்ட செனவட்டை பிரதேசத்தில் மின்னல் தாக்கி உயிரிழந்தவர் தொடர்பில் பொதுமக்களிடம் இருந்து கிடைக்கப் பெற்ற தகவல் ஒன்றிற்கமைய கடந்த வெள்ளிக்கிழமை மாலை குறித்த சடலம் மீட்கப்பட்டிருந்தது.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் ஒரு பிள்ளையின் தந்தையான சம்மாந்துறை 72ஃ2 பி செந்நெல் கிராமம் -02 பிரதேசத்தைச் சேர்ந்த 27 முஹமட் முஸ்தபா முஹமட் சியாம் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

மேலும் குறித்த நபர் மற்றுமொரு நபருடன் வேலையின்நிமித்தம்வயலுக்கு சென்ற நிலையில் இச்சம்பவம் இடம்பெற்றிருந்தது. இதன் போது உயிரிழந்தவரின் அருகில் வயல் வேலையில் ஈடுபட்டவர் காயமடைந்த நிலையில் சம்மாந்தறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

சம்மாந்துறை நீதிமன்ற நீதிவான் கட்டளையின் பிரகாரம் பிரதேச மரண விசாரணை அதிகாரி அப்துல் ஹமீட் அல்-ஜவாஹிர் சம்பவ இடத்திற்கு வருகை தந்து பார்வையிட்ட பின்னர் குறித்த சடலம் சம்மாந்துறை ஆதார வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு மரண விசாரணையின் பின்னர் மின்னல் தாக்கத்ஜ ூல் மரணம் சம்பவித்துள்ளதாக குறிப்பிட்டு உறவினர்களிடம் சடலம் கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.






# யாழ்ப்பாணத்தில் நூல் வெளியீடு

'காட்டிக் கொடுக்கப்பட்ட கடலும் கைவிடப்பட்ட மக்களும்' எனும் தலைப்பிலான நூல் இன்று யாழ்ப்பாணத்தில் வெளியீடு செய்து வைக்கப்பட்டது.

கிராமிய உழைப்பாளர் சங்கம் மற்றும் தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் மரிய நாயகம் நியூட்டன் எழுதிய குறித்த நூல் வெளியிடப்பட்டது.

நிகழ்வின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் தேசிய அமைப்பாளர் ஹேமன் குமார, தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் இணைப்பாளர் இன்பநாயகம் மற்றும் யாழ்மாவட்ட கடற்றொழில் இணையத்தின் ஊடக பேச்சாளர் அன்னராசா, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் இளைஞர் அணிச்செயலாளர் தீபன் திலீசன் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

அங்கு உரையாற்றிய தமிழ் காங்கிரஸ் தலைவர் கஜேந்திரகுமார் தெரிவித்ததாவது:

எமது அமைப்பு சர்வதேச ரீதியாக முன்னெடுக்கப்படும் அமைப்பு. பூகோள அரசியலில் இருந்து எம்மைப் பிரிக்க முடியாது. பூகோள நிலப்பரப்பில் முக்கிய விடயமாக கடற்றொழிலாளர் பிரச்சினைகள் இருக்கின்றன. இந்திய மீனவர்கள் எமது தொழிலை அழித்தல், இதற்குப் போட்டியாக சீன வல்லரசு கடற்பண்ணைகளை நிறுவுதல் என்று பல விடயங்கள் இருக்கின்றன.

சீனாவின் வருகையின் நோக்கத்தை இந்த நூலினூடாக முழுமையாக விளங்கிக் கொள்ள முடிகிறது.

இந்தியாவிற்கு இலங்கை ஒரு பாதுகாப்பான தீவு ஆனால் சீன போன்ற வல்லரசு தடம் பதிப்பது ஆபத்தானது. அதற்காக இந்தியாவின் நிகழ்ச்சி நிரலுக்குள் எமது மக்கள் பாதிக்கப்படுவதை ஏற்றுக்கொள்ளமுடியாது.

இந்திய மீனவர்களின் பிரச்சினை தொடர்பாக இந்திய பிரதமருடன் பேசியபோது பாதிப்புக்கள் தொடர்பாக அனைவரும் உறுதியாக கூறினர். ஆனால் இந்த விடயம் தமிழ்நாட்டில் திட்டமிட்டு மூடி மறைக்கப்படுகிறது. இந்திய மீனவர்களைத் தூண்டி இலங்கை கடற்றொழிலாளர்களை இலங்கை கடற்படையினர்தான் சீண்டுகின்றனர் என்ற ஒரு விடயத்தை கூறியிருக்கின்றனர்.

இரு தரப்பு மீனவர்களையும் சந்திக்க வைத்து இந்தப் பிரச்சினையை உடனடியாகத் தீர்த்து வைக்க வேண்டும் - என்றார்.

# யாழ்ப்பாணத்தில் நேற்று மரதன் ஓட்டப் போட்டி

யாழ். மாவட்ட மெய்வன்மைச் சங்கம் நடத்திய மரதன் ஓட்டம் நேற்று யாழ். நகரத்தில் இடம்பெற்றது. துரையப்பா விளையாட்டு மைநான முன்றலில் ஆரம்பமாகியது. யாழ்ப்பாணம் ஊர்காவற்றுறை வீதியில் மண்கும்பான் வரை சென்று மீண்டும் அதே வழியாக யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கு முன்றலில் நிறைவடைந்தது

இப்போட்டியில் பாடசாலை மாணவர்கள் பல்கலைக்கழக மாணவர்கள் விளையாட்டு கழக வீரர்கள் யாழ். மாவட்ட வீராங்கனைகள் கலந்து கொண்டனர்.

17 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு 7 கிலோ மீற்றர் கொண்ட போட்டியாகவும் 21 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு 21 கிலோ மீற்றர்களைக் கொண்டதாகவும் போட்டி வடிவமைக்கப்பட்டிருந்தது.

17 வயதுக்கு உட் பட்டவர்களுக்கான பெண்கள் பிரிவில் முதலாம் இடம் -அபிசா, இரண்டாம் இடம்- வினுயா, முன்றாம் இடம்-ஷ - டினுஷா. ஆண்கள் பிரிவில் முதலாம் இடம் பிரமீடன், இரண்டாம் இடம் கஸஸ்ரோ, முன்றாம் இடம் யுனாத்.

21 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான போட்டியில் ஆண்கள் பிரிவில் முதலாம் இடம் ஜெயந்தன், இரண்டாம் இடம்- மேகலன், மூன்றாம் இடம்- தனுசிகன். பெண்கள் பிரிவில் முதலாம் இடம் -தனுசிகா, இரண்டாம் இடம்- டனுசியா, மூன்றாம் இடம்- டிசானுகா.

வெற்றி பெற்ற வீர ாங்கனைகளுக்கான பரிசில்களும் சான்றிதழ்களும் போட்டியில் இறுதியில் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் வைத்து வழங்கி வைக்கப்பட்டன.




# புத்தளம் கலா ஓயா ஆற்றில் மூழ்கி இளைஞர் உயிரிழப்பு

(சியாஜ்)

புத்தளம் -வண்ணாத்தவில்லு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கலா ஓயா ஆற்றில் நண்பர்களுடன் குளிப்பதற்காக சென்ற இளைஞன் ஒருவர் வியாழக்கிழமை நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

மதுரங்குளி - கணமூலையைச் சேர்ந்த அபுதாஹிர் முஹம்மது அப்ராஜ் (அப்ரான்) எனும் 21 வயதுடைய இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கலாஓயா ஆற்றில் நீராடுவதற்காக குறித்த இளைஞன் உட்பட நான்கு பேர் சென்று தனது சக நண்பர்களுடன் நீராடிக் கொண்டிருந்த போது குறித்த இளைஞன் 8 அடி ஆழமுள்ள குழி ஒன்றுக்குள் சிக்குண்டு, காணாமல் போயுள்ள நிலையிலேயே குறித்த உயிரிழப்பு இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சுமார் முப்பது நிமிடங்களின் பின்னரே குறித்த இளைஞனை அங்கிருந்தவர்கள் மீட்டு, உடனடியாக புத்தளம் தளவைத்தியசாலையில் சேர்த்துள்ளனர். எனினும் குறித்த இளைஞன் ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் வன்னாத்தவில்லு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கனுவா பகுதியில் நேற்று மண்சரிவு

விகாரகல-பெரகல பிரதான வீதியின் 184ஆவது கிலோ மீற்றரில் உள்ள கனுவா பகுதியில் நேற்று காலை ஒரு பெரிய மண் குவியல், பாறைகள் மற்றும் மரங்கள் சாலையில் விழுந்ததால், சாலையில் போக்குவரத்து பாதிக்கப்பட்டதாக இடர் முகாமைத்துவ மையம் தெரிவித்துள்ளது.

சமீபத்திய மழையால் இந்த மண் சரிவு ஏற்பட்டுள்ளது வெல்லவாய- - பெரகல பிரதான வீதியில் விழுந்துள்ள பாறைகள் மற்றும் மரங்களை அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பண்டாரவளை நிர்வாக பொறியியல் அலுவலகம் தெரிவித்துள்ளது.

# யானை தாக்கி ஒருவர் இறப்பு

அநுராதபுரம் - ஹொரவ்பொத்தானை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சியம்பலாவ பிரதேசத்தில் காட்டு யானை தாக்கி ஒருவர் உயிரிழந்துள்ளதாக ஹொரவ்பொத்தானை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். உயிரிழந்தவர் ஹொரவ்பொத்தானை பிரதேசத்தைச் சேர்ந்தவர். அவருக்கு வயது 44.

இவர் அதிகாலை வீட்டிலிருந்து வெளியே சென்றபோது வீட்டிற்கு முன்பாக நின்றுகொண்டிருந்த காட்டு யானை அவரைத் திடீரெனத் தாக்கியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவரின் சடலம் உடற்கூறாய்வுகளின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# கான்ஸ்டபிள் விபத்தில் சாவு

நிட்டம்புவை பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் உயிரிழந்தார் என்று நிட்டம்புவ பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்றது. மோட்டார் சைக்கிள் ஒன்று வீதியை விட்டு விலகி அருகிலிருந்த தொலைபேசி கம்பத்தில் மோதி விபத்து ஏற்பட்டது.

மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்ற பொலிஸ் கான்ஸ்டபிள் படுகாயமடைந்தார். அவரை வத்துப்பிட்டிவல வைத்தியசாலையில் சேர்த்தபோதும் அங்கு உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் நிட்டம்புவை - ருக்கஹவில பிரதேசத்தைச் சேர்ந்த 32 வயதான பொலிஸ் கான்ஸ்டபிள் என்று அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இவர் கடமைகளை முடித்துவிட்டு வீடு திரும்பிக்கொண்டிருக்கும்போதே இந்த விபத்து இடம்பெற்தாக பொலிஸார் தெரிவித்தனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# வன்னிக் காணிப் பிரச்சினை குறித்து ரவிகரன் எம்.பி. ஆளுநருடன் பேச்சு

வன்னிப் பகுதிகளில் காணப்படும் காணிப் பிரச்சினை உள்ளிட்ட பிரச்சினைகள் மற்றும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், வடக்கு மாகாண ஆளுநர் வேதனாயகனைச் சந்தித்துப் பேசியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள வடக்குமாகாண ஆளுநரின் அலுவலகத்தில் நேற்று இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. தான் எடுத்துக்கூறிய பிரச்சினைகள் தொடர்பில் கவனம் செலுத்துவார் என்று ஆளுநர் உறுதியளித்திருக்கிறார் என்றும் ரவிகரன் தெரிவித்தார்.

இச் சந்திப்புத் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் தெரிவித்ததாவது:

முல்லைத்தீவு, மன்னார்,வவுனியா மாவட்டங்களில் அதாவது வன்னியில் காணப்படும் சில குறைபாடுகள் தொடர்பாக வடக்கு மாகாண அளுநர் நாகலிங்கம் வேதநாயகனை சந்தித்து கலந்துரையாடியிருந்தேன். குறிப்பாக வன்னிப் பகுதியில் காணி தொடர்கில் இருக்கின்ற சிக்கல் நிலமைகள் குறித்தும் அபிவிருத்தியுடன் தொடர்பான விடங்களிலும் கலந்துரையாடியிருந்தேன்.

அந்தவகையில் இச்சந்திப்புதிருப்திகரமாக அமைந்தது என்றார்.

# தமிழர் தாயகத்தில் சிங்கள கட்சிகளுக்கு இடமேயில்லை

## செய்தி தெளிவாக இருக்கவேண்டும் என்கிறார் பிரகாஸ்

சிங்களக் கட்சிகளுக்கு தமிழர் தாயகப் பிரதேசத்தில் இடமில்லை என்ற செய்தி மே 6 சொல்லப்படும். தமிழ் அரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்திற்கு வாக்களிப்பதன் மூலம் தமிழ் மக்கள் இந்தச் செய்தியைச் சொல்லவேண்டும் என்று வலி தெற்கு பிரதேச சபையின் முன்னாள் தலைவர் பிரகாஸ் தெரிவித்தார்.

இலங்கைதமிழரசுக்கட்சியின் வலிகாமம் தெற்கு பிரதேச சபைக்கான தேர்தல் அலுவலகத்தை நேற்று மாலை யாழ். உடுவில் பகுதியில் திறந்து வைத்து உரை ஆற்றும்போதே இதனைத் தெரிவித்தார்

இந்த நிகழ்வில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மானிப்பாய் தொகுதி தலைவர் பிரகாஸ் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் சார்பில் வலிகாமத்தில் பிரதேச சபையில் போட்டியிடும் வேட்பாளர்கள் பொதுமக்கள் எனபலரும் கலந்துகொண்டனர் கலந்துகொண்டனர்.

## பாதாளக் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காவல்துறை உறுதிப்படுத்தியுள்ளது.

கம்பஹாவில் நடத்தப்பட்ட சோதனையின் போது இந்தக் கைதுகள் இடம்பெற்றன, அங்கு இரண்டு சந்தேகநபர்கள் முதலில் இரண்டு துப்பாக்கிகளுடன் கைதுசெய்யப்பட்டனர். அவர்களிடம் நடத்திய விசாரணையில் அதே கும்பலுடன் தொடர்புடைய மேலும் ஐந்து சந்தேகநபர்களையும் அதிரடிப் படையினர் கைது செய்தனர்.

விசாரணையில், ‘கம்பஹா ஒஸ்மான்‘ என்று அடையாளம் காணப்பட்ட ஒருவரை படுகொலைசெய்ய இந்தக்குழு திட்டமிட்டிருந்தது தெரியவந்ததாகக் காவல்துறையினர் தெரிவிக்கின்றனர். சந்தேகநபர்கள் தற்போது காவலில் உள்ளனர்,




## பெரும் அரசிற்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நின்று தனது மனவலிமையை மட்டும் வெளிப்படுத்தி மக்களிற்காக இந்தத் தியாகத்தைச் செய்திருக்கின்றார்.

37 வருடங்களிற்குப் பிறகும் பலர் நாங்கள் அங்கலாய்க்கலாம் எங்களிற்கான அரசியல் தீர்வு கிடைக்கவில்லையென்று. ஆனால் இப்படியான உரமேற்றுகின்ற பலசம்பவங்கள் கடந்து போகா. இவை எல்லாம் சிறப்பான பலனைத் தரும் என்று நம்புகின்றோம். தன்னிடம் இருந்த உயிரை தியாகமாக ஈந்த அன்னைக்கு எங்களது வீர வணக்கங்களைச் செலுத்துகின்றோம் - என்றார்.

இந்நிகழ்வில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் மருத்துவர் சிறிநாத், ஞா.சிறிநேசன், முன்னாள் மட்டக்களப்பு மேயர் தி.சரவணபவன், உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் மற்றும் கட்சி ஆதரவாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

## 24 மணி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரேமதாச நேற்று அனுராதபுரத்தில் தெரிவித்தார்.

அரசாங்கம் பொய் மற்றும் ஏமாற்று வித்தைகள் மூலம் மக்களை திசைதிருப்பி ஏமாற்றிக் கொண்டிருக்கிறது. இன்று அரிசி, பால் மா, தேங்காய் போன்ற அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் அதிகரித்து வருகின்றன, நாட்டு மக்களின் உப்புத் தேவையைக்கூடப் பூர்த்தி செய்ய முடியாததாகவே இந்த ஆளும்தரப்பு காணப்படுகிறது என்றும் தெரிவித்தார்.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நிமித்தம் அனுராதபுரம் மேற்கு தேர்தல் தொகுதி பேமடுவ பிரதேசத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றினார்.

வளமான நாட்டையும், அழகான வாழ்க்கையையும் உருவாக்குவோம் என வாக்குறுதி அளித்து ஆட்சிக்கு வந்த மக்கள் விடுதலை முன்னணியினர் இந்த வாக்குறுதிகளை இன்னும் நிறைவேற்றவில்லை.

இன்று பலர் இந்த ஆளும்தரப்பை பொய் கூறும் ஆளும்தரப்பு என்றும், ஏமாற்று ஆளும்தரப்பு என்றும், கேவலமான அரசியலில் ஈடுபடும் ஆளும்தரப்பு என்றும் கூறுகின்றனர். 24 மணி நேரமும் பொய் மற்றும் ஏமாற்று வித்தைகள் மூலம் மக்களை திசைதிருப்பி ஏமாற்றிக் கொண்டிருக்கிறது இந்த ஆளும்தரப்பு.

எரிபொருள் சலுகை வழங்குவதாக கூறினாலும் இதுவரை இவர்களால் வழங்க முடியாதுபோயுள்ளது. மின்சார கட்டணத்தைகூட இவர்களால் முறையாக குறைக்க முடியாது போயுள்ளது.

மின்கட்டணத்தை 33% குறைப்பதாகச் சொன்னார்கள். ஆனால், கனமழையில் இலாபம் ஈட்டும்போதும் மின்சார சபை மின்கட்டணத்தைக் குறைக்க முடியாது என தெரிவித்தார்கள். பொது மக்கள் பயன்பாட்டு ஆணைக்குழு உண்மைகளை விளக்கியதால், 20% மின்கட்டணத்தைக் குறைக்க நடவடிக்கை எடுத்தது.

அடுத்த போகத்துக்கான வயல் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளபோதிலும், உரமானியம் வழங்கப்படவில்லை. எதிர்காலத்தில் உரங்களின் விலைகள் அதிகரிக்கும். யானை மனித மோதலினால் பெரும் சேதம் ஏற்படுவதாக செய்திகள் வெளியாகி வருகின்றன. பயிர்ச் சேதங்களுக்கு இழப்பீடு வழங்கப்படவில்லை.

இது விவசாய சமூகத்தையும் முழு நாட்டையும் ஏமாற்றும் நடவடிக்கையாகும். இந்த பிரச்சினைகள் எதற்கும் அரசாங்கத்திடம் பதில் இல்லை என்று மேலும் தெரிவித்தார்.

## எதிர்க் கட்சிகள்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விளக்கத்தை வழங்கியுள்ளார். நுவரெலியா மாவட்டம் தலவாக்கலை மற்றும் பதுளை ஆகிய இடங்களில் நேற்று நடந்த தேர்தல் கூட்டங்களில் உரையாற்றும்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

தனது நிலைப்பாட்டை தெளிவுபடுத்திய ஜனாதிபதி, கொழும்பு அரசால் கவனமாக சேகரிக்கப்படும் நிதி ஊழல் நிறைந்த உள்ளூராட்சி மன்றங்களுக்கு ஒதுக்கப்படாது என்று மட்டுமே தான் கூறினார் என்று தெரிவித்தார். தேசிய மக்கள் சக்தியின் கட்டுப்பாட்டில் உள்ள சபைகள் மட்டுமே அவற்றைப் பெறும் என்ற அர்த்தத்தில் அப்படிக் கூறவில்லை என்றும் தெரிவித்தார்.

‘உள்நாட்டு வருவாய்த் துறையுடனான தினசரி சந்திப்புகள் மற்றும் சுங்கத் துறையை நெருக்கமாகக் கண்காணித்தல் மூலம், தற்போது திறைசேரியின் வசம் உள்ள பணத்தை நாங்கள் சேகரித்துள்ளோம். கவனமாகச் சேகரிக்கப்பட்ட அந்தப் பணத்தை ஊழல் நிறைந்த உள்ளூராட்சி மன்றங்களிடம் ஒப்படைக்க முடியாது. நுவரெலியா மாநகர சபைக்குள் ஒரு குழு ஊழல் நிறைந்ததாக இருந்தால், இந்த நிதியை நாம் ஏன் அவர்களிடம் ஒப்படைக்கவேண்டும்?‘ என்று அவர் கேட்டார்.

கொழும்பு அரசு பொது நிதியை துஸ்பிரயோகம் செய்வதைத் தவிர்ப்பது போல, உள்ளூராட்சி மன்றங்களும் பொறுப்புடன் செயல்படவேண்டும் என்று ஜனாதிபதி வலியுறுத்தினார்.

மத்திய அரசு திருடாமல், உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்ந்து திருடும்போது என்ன நடக்கும்? மத்திய அரசு வீண்விரயத்தைத் தவிர்க்கும் அதேவேளையில், பிரதேசசபைகள் பணத்தை வீணாக்குகின்றன. மத்திய அரசு தனது கடமைகளைச் செய்கிறது, ஆனால் உள்ளூராட்சி மன்றங்கள் மக்களைக் காட்டிக் கொடுக்கின்றன. என்றால் மக்களின் பணத்தை நாம் ஏன் தெரிந்தே அத்தகைய நிறுவனங்களிடம் ஒப்படைக்க வேண்டும்?‘ என்று அவர் கேள்வி எழுப்பினார்.

கொழும்பு அரசால் கவனமாகச் சேகரிக்கப்பட்ட நிதி, -மக்களின் பணம்- பிரதேச சபைகளுக்கோ அல்லது நகர சபைகளுக்கோ தவறாகப் பயன்படுத்தப்படுவதற்காக ஒப்படைக்கப்படாது என்பதை தனது அறிக்கை தெளிவாகக் கூறுகின்றது என்று ஜனாதிபதி திசநாயக்க மீண்டும் வலியுறுத்தினார்.



காலைக்கதிர்
Kalaikkathir

# உள்ளாட்சி தேர்தல் 2025

# இரு சமூகத்திற்கும் அபிவிருத்திகளை செய்யக்கூடிய ஒரு சபையாக காரைதீவு சபையை அமைப்போம்

## கலாநிதி ஹக்கீம் செரீப் உறுதி

(றிபாஸ்)

ஐக்கிய சமாதான கூட்டமைப்பு கட்சியில் காரைதீவு பிரதேச சபை மாளிகைக்காடு கிழக்கு வட்டாரத்தில் போட்டியிடும் தானிஷ் ரஹ்மதுல்லாஹ்வின் அரசியல் பணிமனை திறந்து வைக்கப்பட்டது.

ஐக்கிய சமாதான கூட்டமைப்பு கட்சியின் உப தலைவரும், தொழிலதிபருமான கலாநிதி ஹக்கீம் செரீப் பிரதம அதிதியா கலந்து கொண்டு திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் பிரதம அதிதி உரையாற்றுகையில் -

2025 ஆண்டிற்கான உள்ளூராட்சி மன்ற தேர்தலில் ஐக்கிய சமாதான கூட்டமைப்பு கொழும்பு, கொலன்னாவ, கொட்டிகாவத்தை, புத்தளம், கல்பிட்டி, ஆனடுவ, ஆராய்ச்சிகட்டு ஆகிய பகுதிகளில் போட்டியிடுவதுடன் திருகோணமலை மாவட்டத்தில் குச்சவெளி மற்றும் அம்பாறை மாவட்டத்தில் காரைதீவு பிரதேசத்திலும் போட்டிடுகின்றன.





ஐக்கிய சமாதான கூட்டமைப்பு அதிகமான ஆசனங்களை பெற்று ஊழலற்ற ஆட்சி ஒன்றை அமைப்பதுடன் பிரதேசசபைகளினூடாக உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், ஏழை எளிய மக்களின் வாழ்வாதார திட்டங்களை கட்டியெப்புதல், சகல இன மக்களுக்கும் பாரபட்சமின்றி அபிவிருத்திகளை செய்தல், மாத்திரமல்ல காரைதீவு பிரதேச சபை இரு சமூகம் சார்ந்த ஒரு பிரதேச சபையாகவிருப்பதால் ஐக்கிய சமாதானத்தை ஏற்படுத்தக்கூடிய வகையில் அபிவிருத்தி பணிகளையும் மேற்கொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# காத்தான்குடி நகரத்தை அபிவிருத்தி செய்யவேண்டும்: அதற்காகவே உங்களிடம் அதிகாரத்தை கேட்கிறோம்

## கலாநிதி ஹிஸ்புல்லாஹ் கோரிக்கை

(சினீஸ் கான்)



நடைபெறவுள்ள உள்ளூட்சி மன்றத் தேர்தலில், காத்தான்குடி நகர சபையில், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பாக போட்டியிடும் காத்தான்குடி அல்-அக்ஸா வட்டாரவேட்பாளர்எம்.ஐ.எம் ஜவாஹிர் அவர்களை ஆதரித்து தேர்தல் பிரசார காரியாலயம் திறந்து வைக்கும் நிகழ்வும் மக்கள் சந்திப்பும் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித்தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கலாநிதி எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லாஹ் கலந்து சிறப்பித்தார்.

அவர் இதன்போது உரையாற்றுகையில் -

காத்தான்குடி நகரத்தை இன்னும் அபிவிருத்தி செய்து கட்டியெழுப்பவேண்டிய தேவையிருக்கிறது.

மக்களின் தேவைகள் நிறைவு செய்யப் படவேண்டும். அதற்காக எம்மால் முடிந்த அனைத்தையும் செய்துகொண்டிருக்கிறோம்.

அதேபோல் இன்னும் பல சிறந்த செயற்திட்டங்களை மேற்கொள்ள தயாராக இருக்கிறோம்.

அதற்காக உங்கள் முழுயான ஒத்துழைப்பு மற்றும் நகர சபையின் அதிகாரம் முழுமையான தேவைப்படுகிறது.

இதற்காக, பத்து வட்டாரங்களையும் வென்று போதாது அதற்காக ஏனைய சில கட்சிகளையும் இணைத்து செயற்பட தயாராக இருக்கிறோம் - என்றார்.

இந்நிகழ்வில், கட்சியின் உயர்பீட உறுப்பினர்கள், கட்சி முக்கியஸ்தர்கள், காத்தான்குடி நகர சபை வேட்பாளர்கள், கட்சியின் மத்திய முழு உறுப்பினர்கள், ஊர்ப்பிரமுகர்கள், பொதுமக்கள் என பலரும் பங்கேற்றிருந்தனர்.

# பொங்கு தமிழ் தூபியில் அஞ்சலித்த பின்னர் வவுனியா மாநகர சபை பரப்புரை ஆரம்பம்

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஏற்பாட்டில்

வவுனியா மாநகரசபை முன்றிலில் அமைந்துள்ள பொங்கு தமிழ் நினைவுத் தூபியில் அன்னை பூபதி அவர்களுக்கு அஞ்சலி செலுத்திவிட்டு மாநகரசபைக்கான தேர்தல் பரப்புரையை தமிழ் தேசிய மக்கள் முன்னணி நேற்று (சனிக்கிழமை) ஆரம்பித்தது.

அன்னை பூபதி அவர்களின் 37 ஆவது ஆண்டு நினைவு வணக்க நிகழ்வு தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் வவுனியா மாவட்ட அமைப்பாளர் எஸ். தவபாலன் தலைமையில் பொங்கு தமிழ் நினைவுத்தூபி முன்றிலில் இடம்பெற்றது. இதன்போது அன்னைபூபதியின் திருவுருப்படத்திற்கு தீபம் ஏற்றியும், மலர் தூபியும் அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதன்போது, வவுனியா மாநகரசபையில் போட்டியிடும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் வேட்பாளர்கள், ஆதரவாளர்கள், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் எனப் பலரும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

தொடந்து வேட்பாளர்கள் தமது துண்டு பிரசுரங்களை வழங்கி வவுனியா நகரில் பிரசார நடவடிக்கைகளை ஆரம்பித்தனர்.

100

# எதிர்பார்ப்புக்கள் ஏமாற்றப்படமாட்டா கிண்ணியா வட்டார வேட்பாளர் உறுதி

## தேசிய மக்கள் சக்தியின் பிரசாரக் கூட்டத்தில் தெரிவிப்பு

(ஹலால்தீன்)







தேசிய மக்கள் சக்தியின் சார்பில் கிண்ணியா நகர சபைக்கு, கிண்ணியா வட்டாரத்தில் போட்டியிடும் எஸ். நியாஸ்ஸி ன் தேர்தல் பிரசாரமும் மக்கள் சந்திப்பும் வெள்ளிக்கிழமை மாலை 6.00 மணிக்கு கிண்ணியாவில் இடம்பெற்றது.

மக்களை சந்தித்த பின் ஊடகங்களுக்கு அவர் கருத்து தெரிவிக்கும் போது –

கிண்ணியா நகர சபையை சிறந்ததொரு சபையாக மாற்றுவேன். கடந்த காலங்களில் வேட்பாளர்கள் பொய் சொல்லி உங்களிடம் வாக்கெடுத்து பின் அவர்கள் வாக்குறுதியை மறந்து விட்டார்கள் அவ்வாறான ஒரு நிலை இனிமேல் ஏற்படக்கூடாது என்பதற்காகவே நான் போட்டியிடுகின்றேன்.

எமது அரசாங்கம் ஆட்சியில் இருக்கிற படியினால் நகர சபைக்கு உட்பட்ட அதிகாரம் அளிக்கப்பட்ட அனைத்துசேவைகளையும்செய்வேன்.

நகர சபைக்கு அப்பாற்சென்று பல கோரிக்கைகளை நகர சபையின் முன்னேற்றத்திற்காக ஜனாதிபதிபதியின் கையில் நேரடியாக கொடுப்பேன்.

நீங்கள் உங்கள் வாக்குகளை எதிர்க்கட்சிக்கு வழங்குவதால் எந்த ஒரு பிரயோசனமும் கிடையாது.

எமது கட்சிக்கு வழங்குவதன் மூலம் நகர சபைக்கான சரியான தீர்வைப் பெற்றுக் கொடுத்து அதனை நான் சரியான அபிவிருத்தியை காணச் செய்வேன்.

இந்தப் பிரதேசத்தில் காணப்படுகின்ற அனைத்து வளங்களையும் பயன்படுத்தி சரியான கட்டமைப்பினை கொண்டு சிறு வீதி அபிவிருத்தி விளையாட்டு கழக அபிவிருத்தி பெண்களுக்கான சிறு தொழில் வாய்ப்பு, வடிகான் பிரச்சினை மழை காலங்களில் மழை நீர் தேங்கி நிற்கும் பிரச்சினை இவற்றுக்கெல்லாம் சரியான தீர்வினை பெற்று தருவேன்.

எனக்கு வழங்கப்படுகின்ற வாக்குகள் எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் ஏமாற்றம் இல்லாமல் நிச்சயம் நிறைவேற்றப்படும்.

அதற்காகத்தான் எமது அரசாங்கம் இன்று ஆட்சியில் இருக்கின்றது. அதன் மூலமாக எமது அபிவிருத்திகளை இந்த நகர சபையில் நான் செய்து தருவேன் என எஸ்.ஐ.நியாஸ் தெரிவித்தார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# உள்ளாட்சி தேர்தல் 2025

# மலையக மக்களுக்கு உரிமை இல்லை எனக்கூறும் உரிமை எவருக்கும் கிடையாது

## ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவிப்பு

(கிஷாந்தன்)

அரசியல் செய்யும் உரிமை மற்றும் கருத்து சுதந்திரம் என்பவற்றை நாம் மதிக்கின்றோம். எனினும், அவற்றை அடிப்படையாகக்கொண்டு இந்நாட்டில் மீண்டும் இனவாதம் தலைதூக்க ஒருபோதும் இடமளிக்கமாட்டோம். - என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தியின் பிரசாரக்கூட்டம் தலவாக்கலையில் நேற்று (சனிக்கிழமை) நடைபெற்றது. இக்கூட்டத்தில் பங்கேற்று உரையாற்றிய ஜனாதிபதி கூறியவை வருமாறு -

தேர்தலுக்காக கடந்த காலங்களில் மக்கள் பிரித்தாளப்பட்டனர். வடக்கு, தெற்கு, மலையகம் என வெள;வேறாக பிரிந்து வெள;வேறு கட்சிகளுக்கு வாக்களிக்கும் நிலைமைக்காணப்பட்டது. ஆனால் கடந்த தேர்தலின்போது மக்கள் இந்நிலைமையை மாற்றியமைத்தனர். அனைவரும் தேசிய மக்கள் சக்திக்கு பின்னால் திரண்டனர். எனவே, அனைத்து மக்களையும் சமமாக நடத்தக்கூடிய அரசாங்கமொன்றே தேவை. அவ்வாறானதொரு



அரசாங்கமே தற்போது ஆட்சியில் உள்ளது.

இந்நாட்டில் மீண்டும் இனவாதம் தலைதூக்க இடமளிக்கமாட்டோம். இனவாதத்தை தோற்கடிப்பதற்கு நாட்டில் தற்போதுள்ள சட்டங்கள் போதவில்லையெனில் புதிய சட்டங்களை இயற்றியாவது இனவாத அரசியல் தோற்கடிக்கப்படும்.

எமது நாட்டின் பொருளாதாரத்துக்கு மலையக



மக்கள் பெரும் பங்களிப்பு வழங்குகின்றனர். தமது உயிரைக்கூட இந்நாட்டின் மண்ணுக்காக உரமாக்கியுள்ளனர். எனவே, இலங்கை அவர்களின் நாடு அல்ல என எப்படி கூறமுடியும்? இந்நாட்டில் பிறந்து, வளர்ந்து, இறக்கின்றனர் எனில் அவர்கள் எங்கிருந்து வந்தனர் எனக் தேடிக்கொண்டிருப்பதில் பயன் இல்லை.

மலையக மக்கள் இங்கு வந்து 200 வருடங்கள் கடந்துவிட்டன. தற்போது அவர்கள் எங்கிருந்து வந்தனர் என தேடுவதில் என்ன பயன் உள்ளது? எனவே, மலையக மக்களுக்கு உரிமை இல்லை எனக் கூறும் உரிமை கிடையாது. நாம் மனிதர்கள். அனைவரினதும் உரிமைகளை ஏற்கும் அரசாங்கம் உருவாக்கப்பட்டுள்ளது.

எமது நாட்டில் மக்களுக்கிடையில் மீண்டும் போர் ஏற்படாத வகையிலான நாடொன்றை நாம் கட்டியெழுப்புவோம். - என்றார்.

# என்.பி.பி என்ற மாயமானை தமிழர் தாயகத்திலிருந்து அகற்றவேண்டும்

## தமிழ் கட்சிகளுக்கே வாக்களியுங்கள் என்கிறார் தவபாலன்

என்.பி.பி. என்ற மாய மானை தமிழர் தேசத்தில் இருந்து அகற்ற வேண்டும். தமிழ் கட்சிகளுக்கே மக்கள் வாக்களிக்க வேண்டும் என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் வவுனியா மாவட்ட அமைப்பாளர் எஸ்.தவபாலன் தெரிவித்தார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் வவுனியா மாநகர சபைக்கான பிரசார கூட்டம் வவுனியா பொங்கு தமிழ் தூபியில் நேற்று (சனிக்கிழமை) ஆரம்பமாகியது. இதன் போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் -

தமிழர் தாயகம் மிகப்பெரிய நெருக்கடிக்குள் அல்லது மாய வலைக்குள் சிக்கியுள்ள நேரத்தில் இந்த தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது. தாயகத்தை ஆக்கிரமித்திருக்கின்ற ஜே.வி.பி. என்ற இனவாத கட்சி இம்முறையும் எமது வாக்குகளை சூறையாட நினைக்கும் நிலையில் அதற்கு தமிழ் மக்கள் நல்ல பாடம் புகட்டுவார்கள் என்பதை இங்கு கூறிக்கொள்கிறேன்.

ஆட்சிக்கு வந்து ஏழு மாதங்கள் கடக்கின்ற நிலையில் அவர்கள் கூறியது எல்லாம் பொய் என்று வெளிப்பட்டு நிற்பதை அனைவரும் உணர்ந்துள்ளனர். எமது நிலத்தில் எமது மொழியை பயன்படுத்த முடியாத அளவிற்கு அரச அதிகாரம் பயன்படுத்தப்பட்டிருப்பதை ஆனையிறவு உப்பு விடயத்தில் அறிந்து கொள்ள முடியும்.

அத்தோடு தையிட்டி சட்டவிரோத விகாரையில் இவர்களது ஆட்சிக் காலத்தில் தான் புதிதாக தியான மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் கடந்த அரசாங்கங்கள் எவற்றை பின்பன்றியதோ அதைவிட மோசமான முறையில் பல பொய்களை சொல்லி ஆட்சியமைத்த இந்த அரசாங்கம் மீளவும் தமிழ் மக்களை ஏமாற்றவே உள்ளூராட்சி தேர்தல் மூலம் வந்து நிற்கிறது.



எனவே, தமிழர் கிராமங்களிலும் வேருன்ற நினைக்கின்ற ஜே.வி.பியினுடைய என்.பி.பி. என்ற மாய மானை இந்த மண்ணில் இருந்து கலைக்க வேண்டியவர்களாக தமிழ் மக்கள் இருக்கின்றனர். இன்று தேர்தல் விதிமுறைகளை முற்றாக மீறிய ஒரு கட்சியாக இது இருக்கிறது. மன்னார் மாவட்டத்தில் அண்மையில் ஜனாதிபதி பங்கேற்ற கூட்டம் ஒன்றில் சர்வாதிகாரப் போக்கிலே தனது வார்த்தைகளை பிரயோகித்துக் கொண்டிருக்கின்றார். ஒரு ஜனாதிபதியாக இருந்து கொண்டு இவ்வாறு செயற்படுவதானது உச்சக்கட்ட தேர்தல் விதிமீறலாகவே அமைந்துள்ளது.

எனவே வடக்கு கிழக்கு மக்கள் நேர்மையான அரசியலை முன்நகர்த்திச் செல்பவர்கள் என்ற அடிப்படையில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியை இந்த தேர்தலில் பலப்படுத்த வேண்டும். அதன் மூலமே என்.பி.பி. என்ற மாயமானை வடக்கு கிழக்கில் இருந்து அகற்ற முடியும்.

உள்ளூராட்சி மன்றங்களில் மாற்றம் ஒன்றை நிகழ்த்துவதற்கு எமது அரசியல் இயக்கம் தயாராக இருக்கிறது. அத்துடன் இந்த நெருக்கடிகளில் இருந்து மக்கள் விடுபடவேண்டுமாக இருந்தால் எமது அரசியல் இயக்கத்திற்கு வாக்குகளை செலுத்தாவிடிலும் நிச்சயமாக ஏதாவது ஒரு தமிழ் கட்சிக்கே உங்கள் வாக்குகளை அளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். - என்றார். 100

# மே 6 சிரமதானத்தையும் சிறப்பாக செய்வோம்

## கிருஷ்ணன் கலைச்செல்வி எம்.பி. தெரிவிப்பு

(கிஷாந்தன்)



மே 6 ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் நுவரெலியா மாவட்டத்தில் 12 சபைகளையும் கைப்பற்றுவதற்கு நாம் தயார் நிலையில் இருக்கின்றோம். அதற்குரிய பேராதரவை மக்கள் எமக்கு வழங்கிவருகின்றனர். - என்று தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கிருஷ்ணன் கலைச்செல்வி தெரிவித்தார்.

தலவாக்கலையில் நேற்று நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு -

ஜனாதிபதி தேர்தல் மற்றும் பொதுத்தேர்தலின்போது நாட்டை சுத்தப்படுத்தும் சிரமதானத்தை வெற்றிகரமாக செய்து முடித்துள்ளோம். நுவரெலியா மாவட்டத்தின் தலைவிதியையும் மாற்றினோம். இன்னும் ஓர் சிரமதானம் எஞ்சியுள்ளது. அதனையும் வெற்றிகரமாக செய்து முடிப்போம்.

பிறப்பு முதல் இறப்புவரை எமது வாழ்க்கையுடன் உள்ளூராட்சிசபைகள் தொடர்புபட்டுள்ளன. எனவே, ஊழல், மோசடிகளுடன் தொடர்புடையவர்களுக்கு ஆணை வழங்கிவிடக்கூடாது. கொள்கையை முன்வைத்து பிரசாரம் செய்வதைவிடுத்து, நுவரெலியா மாவட்டத்தில் இனவாதத்தை தூண்டும் வகையில் சில அரசியல்வாதிகள் பிரசாரத்தை முன்னெடுக்கின்றனர். எமது ஆட்சியில் இனவாதத்துக்கு இடமில்லை. அவ்வாறு பாகுபாடு காட்டப்படவும் மாட்டாது.

எனவே, இனவாதத்தை பரப்பும் அரசியல்வாதிகளின் கருத்துகளை மக்கள் நம்பக்கூடாது. அதேபோல தமது கொள்கைகளை முன்வைத்து பிரசாரம் செய்யுமாறு அரசியல்வாதிகளிடமும் கேட்டுக்கொள்கின்றேன். - என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளால் அன்னை பூபதியின் 37 ஆவது நினைவு தினம் அனுஸ்டிப்பு

வவுனியாவில் அன்னை பூபதியின் 37 ஆவது நினைவுதினம்தமிழர்தாயக காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தால் நேற்று (சனிக்கிழமை) அனுஸ்டிக்கப்பட்டது.

அவர்கள் தொடர் போராட்டம் மேற்கொண்டு வரும் வீதி அபிவிருத்தி திணைக்களத்திற்கு முன்பாக உள்ள கொட்டகையில் குறித்த நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது அன்னாரது திருவுருவப் படத்திற்கு மாலை அணிவிக்கப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

இது தொடர்பாக கருத்து தெரிவித்த காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினர் -

தமிழ் மக்களின் இறைமையைப் பாதுக்காப்பதற்காகவும், உரிமைகளுக்காகவும் தன்னை அர்ப்பணித்த அன்னைக்கான அஞ்சலியை தமிழர் தேசம் செலுத்திக் கொண்டிருக்கிறது.

தமிழர்கள் காணாமல் ஆக்கப்பட்ட விடயத்தை சர்வதேச பொறிமுறையூடாக சர்வதேச மத்தியஸ்தத்தின் ஊடாகவே தீர்க்கமுடியும். குற்றவாளிகளே பிரச்சினையை தீர்ப்பது நீதியாக அமையாது.

அத்துடன் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான தீர்வை பெறுவதற்கு தமிழ் இறையாண்மை அவசியமான ஒன்று. அதனை நோக்கியே எமது போராட்டங்கள் அமைந்துள்ளது. எதிர்காலத்திலும் தமிழ் இறையாண்மை எமக்கு தேவை என்ற விடயத்தை தொடர்ச்சியாக சர்வதேசத்திற்கு உரத்துச் சொல்வோம். - என்றனர். 100

# பாவலர் பஸீல் காரியப்பர் நினைவுப் பேருரை

(சர்ஜுன் லாபீர்)

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் சம்மாந்துறை பிரதேச செயலகம் இணைந்து நடந்தும் நாடறிந்த கலைஞர், கவிஞர் பாவலர் பஸீல் காரியப்பர் நினைவுப் பேருரை நேற்று (சனிக்கிழமை) சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல் முஹம்மது ஹனீபா தலைமையில் சம்மாந்துறை கலாசார நிலையத்தில் இடம்பெற்றது.

இந்த நினைவுப் பேருரை நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் சரவணமுத்து நவநீதன் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

மேலும் இந் நிகழ்வுக்கு சம்மாந்துறை பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் யூ.எம் அஸ்லம், கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சின் முன்னாள் செயலாளர் எம்.எம் நஸீர், சம்மாந்துறை மஜ்லிஸ் அஷ்ராவின் தலைவர் எம்.ஐ.எம். அமீர் (நளீமி), தென்கிழக்கு பல்கலைக்கழக முன்னாள் பதிவாளர் மன்சூர் ஏ காதர், அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை வைத்தியர் பாடகர் எம்.ஏ.எம் முபாரிஸ், அம்பாறை மாவட்ட கலாசார இணைப்பாளர் ஏ.எல் தௌபீக், சம்மாந்துறை பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் ரஸ்மி எம் மூஸா, உட்பட பல கலைஞர்களும் கலந்து கொண்டனர்.



பாவலர் பஸீல் காரியப்பரை பற்றிய அறிமுகவுரையை ஓய்வுபெற்ற முன்னாள் அதிபர் ஏ.சி இஸ்மாலெப்பையால் நிகழ்த்தப்பட்டதோடு நினைப்புப் பேருரையினை தென்கிழக்கு பல்கலைக்கழக சிரேஸ்ட விரிவுரையாளர் பேராசிரியர் ரமீஸ் அப்துல்லாவால் நிகழ்த்தப்பட்டது.



இந்த நினைவுப் பேருரையில் பேருரையாளர் அறிமுகத்தை உதவிப் பிரதேச செயலாளர் அஸ்லம் சிறப்பாக நிகழ்த்தினார் என்பதும் குறிப்பிடத்தக்கது.





காலைக்கதிர் Kalaikkathir

# கிளிநொச்சியில் படையினரின் புத்தாண்டு விளையாட்டுக்கள்

சித்திரைப் புத்தாண்டினை சிறப்பிக்கும் முகமாக இலங்கைப் பாதுகாப்பு படைப்பிரிவின் 55 ஆவது காலாற் படையணியின் ஏற்பாட்டில் கிளிநொச்சி மாவட்டத்தில் நேற்று (சனிக்கிழமை) கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் சிறப்பான முறையில் இடம்பெற்றது.

இதன் ஆரம்ப நிகழ்வாக நேற்;று காலை 6.00 மணியளவில் ஆண் பெண் இருபாலாருக்குமான சைக்கிள் ஓட்டம் மற்றும் மரதனோட்ட போட்டிகள் நடைபெற்றன.

இந்த ஆரம்ப விளையாட்டு நிகழ்வை கிளிநொச்சி மாவட்ட 55 ஆவது காலாற்படைப் பிரிவின் தளபதி மேஜர்ஜெனரல் சம்பத் பெனாண்டோ ஆரம்பித்து வைத்தார்.

அத்துடன் சித்திரைப் புத்தாண்டினை சிறப்பிக்கும் வகையில் கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணம் படை முகாம்களின் கட்டளை தளபதி மேஜர்ஜெனரல் மானத யாம்பத் கிளிநொச்சி சந்திரசேன,

இதனைத் தொடர்ந்து மைதான விளையாட்டுக்களான வழுக்குமரம் ஏறுதல், தலையணைச் சண்டை முதலான பல பாரம்பரிய விளையாட்டுக்கள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த விளையாட்டு விழாவின் இரவு நிகழ்வாக 'அக்னி ' இசைக்குழுவின் இன்னிசை நிகழ்வு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. 316

# இரு மோட்டார் சைக்கிள்கள் நேருக்குநேர் மோதி விபத்து

## மட்டக்களப்பில் இளம் குடும்பஸ்தர் இறப்பு





மட்டக்களப்பு - சந்திவெளி பிரதேசத்தில் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதியதில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார் என சந்திவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

விபத்தில் சந்திவெளி பிரதேசத்தைச் சேர்ந்த 27 வயதுடைய இளம் குடும்பஸ்தரே உயிரிழந்துள்ளார்.

ஒரே மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த மூவர் காயமடைந்துள்ளனர்.

மேலும், விபத்தில் காயமடைந்த இரண்டு பேர் தலைமறைவாகியுள்ளனர் எனவும் பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது.

விபத்தில் உயிரிழந்தவரின் சடலம் சந்திவெளி வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்ட பின்னர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் பிரேத பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.



விபத்தில் இரண்டு மோட்டார் சைக்கிள்களும் பலத்த சேதமடைந்துள்ளதுடன் மேலதிக விசாரணைகளை சந்திவெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 20.04.2025இல் வெளியிடப்பெற்றது